*Intervention 2009, Volume 7, Number 2, Page 174 - 176*

# Summaries in Tamil

**எகிப்திலுள்ள ஈராக்கிய அகதிகள்: அவர்களுடைய மனநல மற்றும் உளசமூக நிலைபற்றிய ஒரு ஆய்வு**

றப்பு, சித்திரவதை, ஆட்கடத்தல், மற்றும் இராணுவத் தாக்குதல்களில் இருந்து தப்பி 2003 ம் ஆண்டில் இருந்து ஆயிரக்கணக்கான ஈராக்கிய அகதிகள் எகிப்தில் குடியேறியுள்ளார்கள். தமது வாழ்க்கையில் நிச்சயமற்ற தன்மைக்கு முகம்கொடுத்த இவர்களின் புதிய வாழ்க்கையில் மேலும் உளசமூக சவால்களுக்கு கறை பூசப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக் கற்கையின்போது எகிப்திலுள்ள ஈராக்கிய அகதிகள் முகம்கொடுக்கும் உளசமூக அழுத்தங்கள் பற்றி விபரிக்கின்றது. எகிப்திலுள்ள 204 ஈராக்கியர்கள் 4 குழுவாக்கப்பட்ட நெருக்கம்/அழுத்தத்திற்கான காரணிகள் கொண்ட check list ஐ நிரப்பினார்கள். இந்தக் கற்கை தந்த தகவல்கள், ஈராக்கிய அகதிகளின் வாழ்க்கையில் பல்வேறு கோணங்களில் இருந்து பிரயோகிக்கப்பட்ட வன்முறைகளின் பங்களிப்புப்பற்றி வெளிப்படுத்திக் காட்டுகின்றது. 56% மேற்பட்டோர் குடியகல்விற்கு முன்பே பலமுறைகள் மனவடுவிற்குள்ளாகும் நிலைமைகளை அனுபவித்திருக்கின்றார்கள். அத்தோடு அகதிகளே தங்களுடைய ஆரோக்கியம், மனநலம் மற்றும் சமூக- பொருளாதார கேள்விகளில் ஏற்பட்ட பாரிய தாக்கங்கள் பற்றி அறிக்கையிட்டுள்ளார்கள். தகவல் தந்தோரில் மூன்றில் ஒரு பங்கினரே வீடுதிரும்புவதற்கான ஊக்கமான அபிலாஷைகளை வெளிப்படுத்தினார்கள்.

**முக்கிய சொற்பதங்கள்:** மனஅழுத்தம், எகிப்திலுள்ள ஈராக்கிய அகதிகள், உளசமூகம், மனநெருக்கம், வன்முறை

**வட உகண்டாவில் தொழில் பயிற்சிப் பாடசாலையிலிருக்கும் ஆபத்து நிலையிலுள்ள இளைஞர்களுக்கான உளசமூக உதவி**

வட உகண்டாவில் கிற்கொம் பிரதேசத்தில் AVSI நிறுவனத்தின் (உகண்டாவில் 1984 தொடக்கம் பணிபுரியும் ஓர் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம்) உளசமூக இடையீடுகளை இக் கட்டுரை விளக்குகிறது. இவ் இடையீடுகள், ஆபத்து நிலையிலுள்ள இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி மூலமாக உதவி அளிக்கும் கல்வித்திட்டத்தின் ஒரு பகுதியாகும். கல்வி உதவிக்கு மேலாக உளசமூக உதவியும் வழங்கப்பட்டது. இது 20 வருடங்களுக்கும் மேலாக உகண்டாவில் நீடித்த பாதுகாப்பற்ற சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட, சில சமயங்களில் மன வடுவிற்காளான இளைஞர்களிற்கு உதவி வளங்கும் நோக்கிலான திட்டமாகும். பல இளைஞர்களுக்கு, கல்வி பெற்றுக்கொடுப்பது மட்டும் அவர்களின் உடலியற் பிரச்சினைகளிலிருந்து விடுபட அவர்களை வலுவூட்டும் தீர்வாகாது. உள நல ஆற்றுப்படுத்தலும் சேரும் போது அவர்களின் தன்னம்பிக்கை அதிகரித்து, சமூகத்தின் முக்கிய சுதந்திரமான நபர்களாகத் தமது பங்குகளை மீழ் நிர்ணயம் செய்யும் வாய்ப்புக் கிட்டும்.

**முக்கிய சொற்கள்:** உளசமூக இடையீடுகள், தொழிற் பயிற்சி, வட உகண்டா, ஆபத்து நிலையிலுள்ள இளைஞர்

**மிகவும் வளப்பற்றாக்குறையான நிலைப்பாட்டில், மனநல மற்றும் உளசமூக ஆதரவு இடையீடுகளை உருவாக்கல்: தெற்கு சூடானிலிருந்து ஒரு ஆய்வுக்கற்கை**

தெற்கு சூடானின் நிலைமையானது, மனநல மற்றும் உளசமூக ஆதரவு சேவைகளை உருவாக்குவதில் மிகவும் கடினமான சவால்களை உருவாக்குகின்றது: உள்ளுர் அரச அமைப்புகள் மிகவும் நலிந்தனவையாகவும் சுகாதார அமைப்பு, மனிதவளம், கட்டுமானங்கள் மற்றும் மருத்துவ கருவிகள் சார்ந்த அடிப்படை சுகாதாரம், பெரும் அளவில் செயலற்றும்


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

காணப்படும் நிலை. அவ்வாறான நிலையில் MHPSS ஐ கட்டியெழுப்புவதற்கு உள்ளூர் பணியாளர்களின் ஆழுமையை கட்டியெழுப்பல் மற்றும் பங்குபற்றல் பொறிமுறையூடாக சமூகத்தில் விழிப்புணர்வு செயற்பாடுகள் என்பவற்றில் ஆழமான கவனம் தேவைப்படும். இந்தப் பிரசுரமானது தெற்கு சூடானிலுள்ள ஜெயி ஆற்று நாட்டில் நடைபெறும் வெவ்வேறு மட்டங்களை இலக்குவைக்கும் (தனிநபர், குடும்பம், சமூகம்) மற்றும் தடுப்பு முறை, சிகிச்சைமுறை இரண்டையும் இணைத்த சமூக சுகாதார சட்டவரைபை பயன்படுத்தும் திட்டம் பற்றி விபரிக்கின்றது. மிகவும் தீவிரமான சவால்களுக்கு மேலாக, இத்திட்டமானது வளம்குறைந்த ஆயுத முரண்பாட்டிற்கு பின்னான சூழ்நிலைகளிலும் சமூகம்சார் அணுகுமுறையூடாக இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்தல் இலகுவானது என்பதனை வெளிப்படுத்துகின்றது. இதில் நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் அவிவிருத்தி என்பன இதனை இணைநிரப்புபவையான காணப்படும்.

**முக்கிய சொற்பதங்கள்:** தெற்குசூடான், ஆழுமைவளர்த்தல், பல்மட்ட இடையீடுகள்

### இடம்பெயர்வுக்கு முகம் கொடுத்தல்: வட உகண்டாவின் கிற்கொம் பிரதேசத்திலிருக்கும் உள்நாட்டல் இடம்பெயர்ந்தோர் முகாமின் பிரச்சினைகளும் பதில்களும்

இடம் பெயர்ந்த சமூகங்கள் தம்மிடம் மீதமிருக்கும் வளங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் சவால்களாலும் இழப்புகளாலும் மாற்றமடைந்துள்ள தமது நிலைக்கு முகம் கொடுப்பார்கள். சமூக முன்னெடுப்புகளையும் தமது நிறுவன வளங்களையும் எவ்வாறு சிறப்பான முறையில் இணைப்பது என்பதே இப்பிரதேசங்களில் தொழில் புரிவோரின் சவாலாகும். இக்கட்டுரை உகண்டாவில் 4 முகாங்களில் வசிக்கும் 112 வாசிகளுடன் நடாத்திய கற்கை ஒன்றை விபரிக்கிறது. பதிலளித்தவர்கள் பெரும்பாலும் தாம் எதிர் நோக்கிய கட்டமைப்பு சார், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைக் கூறினார்கள். அதிகமாக, அடிப்படை விடையங்களான உணவு, சுகாதாரம், வறுமை என்பன முகாம் அமைக்கப்பட்ட முறை மற்றும் வளங்களின் அடிப்படையில் ஒப்பிடப்பட்டன. பதிலளித்தவர்கள் இப்பிரச்சினைளுக்குப் பதிலாகப் பின்வரும் 4 விடையங்களைக் குறிப்பிட்டனர்: மற்றவர்களின் உதவி (அயலவர், உறவினர், நிறுவனங்கள், சமூக அமைப்புகள்), தொழில் மற்றும் வருமான விருத்தி, தனியாள் குணாதிசியங்கள் (உறுதி, கடின உழைப்பு), சமூக ஆதரவு.

**முக்கிய சொற்கள்:** உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள், முகம் கொடுக்கும் யுக்திகள், உகண்டா, முகாம்

### பிள்ளைகளால் முன்னெடுக்கப்பட்ட குறிகாட்டிகள்: நேபாள முன்னாள் பிள்ளைப் போராளிகளுக்காள உள சமூக உதவிக்கான பங்குபற்றல் கருவியின் (participation tool) பரீட்சார்த்தம்

சிறுவர்களுக்கான பாதுகாப்பு அற்ற நிலமையில் ஒதுக்கப்பட்ட பிள்ளைகள் மற்றும் இளையவர்களிற்குரிய செயற் திட்டங்களில் பங்களிப்பு முறையிலான திட்டங்களுக்குப் பெரும் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. நேபாளத்தில், முன்னாள் சிறுவர் போராளிகளை ஒன்றிணைத்தலை இலகுபடுத்தும் உளசமூக திட்டத்திற்கு பிள்ளைகளின் பங்களிப்பிற்கான முறையான ஓர் சட்ட வரைபு உருவாக்கப்பட்டது. இத் திட்டம் பிள்ளைகளுடன் மேற்கொள்ள வேண்டிய ஏழு படிமுறைகளைக் கொண்டிருந்தது. உளசமூக நன்னிலை மற்றும் பிரச்சினைகள் தொடர்பான நிலையான எண்ணக்கருக்கள், எதிர்பார்க்கப்படும் வெளியீடுகள், ஏற்கனவே உள்ள வளங்களைப் பயன்படுத்தல், பதில் நடவடிக்கைகள் மற்றும் கண்காணித்தலுகாகன அபிவிருத்திக் குறிகாட்டிகள் (CLI). இதன் பலன்களாக, பிள்ளைகள் முன்னுரிமைப் படுத்திய அல்லது மற்றவர்களில் இனம் கண்ட, செயற்திட்ட சுற்றுவட்டத்தின் முலம் கண்காணிக்கக்



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

கூடிய குறிகாட்டிகள் (CLI) ஏற்பட்டன. CLI கருவியை உருவாக்கி செயற்படுத்தும் போது பல சவால்கள் ஏற்பட்டன. இவை இதன் செயற்படுத்தலுக்கும் பயன்படு தன்மைக்கும் சவால்களாக அமைந்ததுடன் பங்களிப்பு முறையிலான செயற்திட்டங்களின் மேலான அதிகரித்துவரும் விமர்சனங்களையும் பிரதிபலித்தன. இக் கட்டுரையானது சட்டவரைபையும் அதன் பரீட்சார்த்தத்தின் போது கிடைத்த பலன்களையும் விபரிக்கியது.

**முக்கிய சொற்கள்:** சிறுவர் பங்களிப்பு, முன்னாள் சிறுவர் போராளிகள், நேபாளம்

**உள்ளூர் பணியாளர்களிடமிருந்தான பின்னூட்டல்: எனது வாழ்க்கையை மாற்றிய அனுபவங்கள்: உளசமூக செயற்திட்டத்தில் பணியாற்றும் ஒரு ஆப்கானிய பெண்மணியின் கதை**

இந்த அறிக்கையின் எழுத்தாளர் ஒரு ஆப்கானிய பெண், தனது நாட்டில் ஒரு சர்வதேச நிறுவனத்தில் பங்காற்றியபோது தனது தனிப்பட்ட மற்றும் தொழில்துறைசார் அவிவிருத்திபற்றி விபரிக்கின்றார். 1996ம் ஆண்டில் தலிபான் படையணியின் ஆட்சிக்குக்கீழ் Action contre la faim (ACF)வின் குறைபோஷாக்குத் செயற்திட்டத்தில் அவர் பணியாற்றத் துவங்கினார். அதன் பின் அவர் உளசமூக செயற்திட்டத்தில் இணைந்து பெண்கள், சிறுவர்களுடன் பணியாற்றினார். அவருடைய துறைசார் அனுபவங்களும், தனிப்பட்ட வாழ்க்கை அனுபவங்களும் ஒன்றுடன் ஒன்று பலமாக இணைந்தவை. உளசமூகபணியானது அவருடைய நிலையிலும் வாழ்க்கைத் தோற்றப்பாட்டிலும் மிகவும் ஆழமான ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

**முக்கிய சொற்பதங்கள்:** ஆப்கானிஸ்தான், பெண்கள், தொழில் துறைசார் அபிவிருத்தி, தனிப்பட்ட வாழ்க்கை, உளசமூக ஆதரவு



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.